திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியிலுள்ள, வேளச்சேரி சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியதைப்போல, துறையின்மூலமாக நிலங்கள் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டால் முன்னுரிமை அடிப்படையிலே கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 221, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

222—

கால்நடை மருத்துவமனை

***4122—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, வேப்பத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவிடைமருதூர் தொகுதி, வேப்பத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள்

2012 மே 7]

கேட்டிருக்கிறார்கள். அங்கே, கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், விதிப்படி 3,000 கால்நடைகளுக்குமேல் இருப்பதால் அங்கே கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் அமைக்க அம்மாவினுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட, படந்தாலுமூடு பகுதியில் தற்பொழுது கால்நடை First Aid Centre உள்ளது. அதைக் கிளை நிலையமாகவோ அல்லது மருந்தகமாகவோ தரம் உயர்த்துவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் விதிப்படி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கிராமத்திலே 3,000 கால்நடைகளுக்குமேல் இருக்கும் என்று சொன்னால், அதைச் சுற்றி 3 கி.மீ. தூரத்தில் வேறு கிளை நிலையம் இல்லையென்று சொன்னால், அம்மாவின் அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் தகுதிகளும் நிரம்பப் பெற்றிருக்கின்ற குறிஞ்சிப்பாடி தொகுதி, வெள்ளைக்கரை ஊராட்சியில் ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே 10,000 கால்நடைகளுக்குமேல் இருக்க வேண்டும். தினந்தோறும் 60 கால்நடைகள் அந்த மருத்துவமனைக்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும். அங்கே மருத்துவமனை அமைக்கக்கூடிய இடம் மற்றும் வசதிகள் இருக்கின்ற நிலை இருக்கிறதென்று சொன்னால் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இதுகுறித்துப் பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் ஒன்றியம், நடுவலூரில் 3,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கிராம மக்கள், 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாகலாபுரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு துணைக் கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிப்படி அங்கே 3,000 கால்நடைகளுக்குமேல் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான நிலக்கோட்டை தொகுதியில் அமைந்துள்ள செங்கட்டாம்பட்டி பகுதியிலிருந்து வத்தலகுண்டு 12 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதால், மாண்புமிகு*

அமைச்சர் அவர்கள் செங்கட்டாம்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிப்படி சூழ்நிலைகள் அங்கே இருக்கிறதென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதி, சீர்வனந்தல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் இருக்கிறது. அங்கிருந்து மூங்கில்துறைப்பட்டு மருத்துவமனைக்கு 12 கி.மீ. தூரமும், மணலூர்ப்பேட்டை மருத்துவமனைக்கு 15 கி.மீ. தூரமும் உள்ளது. 8,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் அங்கே இருக்கின்ற காரணத்தினாலே, சீர்வனந்தல் கிராமத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அங்கு 8,000 கால்நடைகள்தான் இருக்கின்றன என்று சொல்லிவிட்டார்கள். எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறை விதியின்கீழ், 8,000 கால்நடைகள் இருந்தால் கால்நடை மருந்தகம்தான் இருக்கும். 10,000 கால்நடைகளுக்கு மேல் இருந்தால்தான் அது மருத்துவமனையாக மாற்றப்படும். எனவே, எதிர்காலத்திலே 10,000 கால்நடைகளுக்குமேல் அங்கே உருவாகுகிற நிலை வரும்போது, நிச்சயமாக அதை மருத்துவமனையாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மே 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கம்மாபுரம் ஒன்றியம், வடக்கு சேப்பளாநத்தத்திலும், புவனகிரி ஒன்றியம், அகரஆலம்படி ஊராட்சியிலும் துணை கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு, அரசு விதிகளுக்கு உட்பட்டு இருப்பதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு துணை மருந்தகம் அமைப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2012–2013 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 50 கால்நடை கிளை நிலையம் அமைக்க ஆணையிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே உறுப்பினர் சொன்ன கிராமத்திலே 3,000 கால்நடைகளுக்குமேல் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அதிலே ஒன்றை அமைக்க மாண்புமிகு அம்மாவுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, அரவட்லா மலை கிராமங்களுக்கு ஒரு கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நிலையைத்தான் நான் மீண்டும் சொல்லவேண்டும். உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே 3,000 கால்நடைகளுக்குமேல் இருக்குமென்று சொன்னால், அங்கே 3 கி.மீ. தொலைவிற்கு எந்தக் கிளை மருத்துவ நிலையமும்*

2012 மே 7]

இல்லையென்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** கால்நடைகள் எவ்வளவு இருந்தால் என்ற விதியைத் தளர்வு செய்ய அரசு முன்வருமா? ஒரு நாளைக்கு எத்தனை கால்நடைகள் மருத்துவமனைகளுக்கு வருகின்றன என்பதைத் தளர்வு செய்யுமா? கால்நடைகளின் நலன், விவசாயிகளின் நலன், தூரம், இவற்றைக் கணக்கில் வைத்துக்கொண்டு கால்நடை மருத்துவமனை அமைத்தால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து கொஞ்சம் கவனியுங்கள். அந்த comparison வேண்டாம். நீங்கள் அதற்கான norms குறித்துக் கேளுங்கள். அந்த norms–ஐ relax செய்வதற்கு நீங்கள் sub question–ஆகக் கேட்கலாம். அதனால், ** என்று பேசியது அவைக் குறிப்பில் இருக்காது. நீங்கள் அந்த norms–ஐ மட்டும் சொல்லி, rules–ஐ relax செய்வது குறித்து கேளுங்கள். (குறுக்கீடு) அதைத்தான் கூறுகிறேன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்காக, தற்போதுள்ள விதியினைச் சொல்கிறேன். ஒரு கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் கிராமத்தைச் சுற்றி 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். ஒரு மருந்தகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 5 கி.மீ. தூரத்திற்கு 5,000 கால்நடைகள் இருக்க வேண்டும். ஒரு மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 10,000 கால்நடைகள் இருக்க வேண்டும். அங்கே ஒரு நாளைக்கு சராசரியாக 60 கால்நடைகளாவது மருத்துவமனைக்கு வரவேண்டும். இதுதான் தற்போதுள்ள விதி. இதை மாற்ற வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட இச்சிப்புத்தூர் ஊராட்சி, கடவரைகண்டிகை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே அமையவிருக்கின்ற 50 கிளை நிலையங்களில், உறுப்பினர் சொல்கின்ற கிராமத்தை நாங்கள் ஆய்வு செய்து பார்க்கும்போது, அங்கு 3,000 கால்நடைகளுக்கு மேல் இருந்தால் நிச்சயமாக அந்த 50 கால்நடைக் கிளை நிலையங்களிலே ஒன்றை உங்களுக்கு வழங்க பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

முற்பகல் 10—50

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதிக்குட்பட்ட கொள்ளிடம் ஒன்றியத்தில், எருக்கூர் ஊராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் அல்லது கிளை மருந்தகமாவது அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக மருந்தகம் அமைக்க முடியாது. முதலிலே, அந்தக் கிராமத்திலே ஒரு கிளை நிலையம்தான் அமைக்க முடியும். எனவே, அந்த அடிப்படையிலே நீங்கள் சொல்லுகின்ற கிராமத்திலே கிளை நிலையம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று சொன்னால் அங்கே கிளை

2012 மே 7]

நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

சொந்தக் கட்டடம்

***6871—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூரிலுள்ள அரசு கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் கிளை நூலகத்திற்கு இலவசமாக காலிமனை ஒதுக்கீடு செய்து தருமாறு அம்பத்தூர் நகராட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. இலவச காலிமனை பெறப்பட்டதும், மேற்படி நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள கொரட்டூர் பகுதியில்* H.R.& C.E.–*இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 188, நிலம் உள்ளது. அதனைக் கைப்பற்றி, 50*